24.02.2026 OS.No.82/2024 PW1 Name :.**சுரேஷ்**

குறுக்கு விசாரணை

1. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். பேன்சி ஸ்டோர் வைத்துள்ளேன். ரியல்எஸ்டேட் தொழிலும் செய்கிறேன். ரியல்எஸ்டேட் தொழிலை வாணியம்பாடியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருகிறேனா என்றால் இருக்கலாம். ரமேஷ் என்பவர் மூலமாக பிரதிவாதியை தெரியும். ரமேஷ் மேட்டுபாளையத்தை சார்ந்தவர். அந்த விவரத்தை அறிவிப்பிலும் வழக்குரையிலும் கூறவில்லை. பிரதிவாதி ரமேஷ்யிடம் கடன் கேட்டுள்ளபோது அவர் மூலமாக பிரதிவாதி எனக்கு பழக்கம் என்றால் அவ்வாறு இல்லை சொத்தை விற்பதற்காக தான் பிரதிவாதி என்னிடம் வந்தார்.
2. பிரதிவாதி என்னிடம் வட்டிக்காக தான் பணம் கேட்டார் என்றால் தவறு. நான் வட்டிக்காக தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றும் சொத்தை விற்பதற்காக பணம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பதில் அறிவிப்பில் அந்த விவரத்தை பிரதிவாதி கூறியுள்ளார் ஆனால் அது உண்மை கிடையாது. பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனை வட்டியும் முதலுமாக என்னிடம் திருப்பி கொடுத்து அதற்காக நான் நோட்புத்தகத்தில் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.
3. என்னுடைய வங்கி கணக்கிற்கு பிரதிவாதி பணம் செலுத்தியுள்ளார் என்றால் அதை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். பிரதிவாதியிடம்

நான் ரூ.6,00,000/- சொத்து வாங்குவதற்காக கொடுத்துள்ளேன். ஆனால் பிரதிவாதி எனக்கு ரூ.10,000 அல்லது 12,000 என திருப்பி கொடுத்தார் அதை வாங்கவில்லை. எனக்கு இந்தியன் வங்கி வாணியம்பாடி கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. இதே போன்று சுமார் 5 வழக்குகள் பல்வேறு நபர்கள் மீது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். கடனுறுதி சீட்டு வழக்குகள் எதுவும் அதில் இல்லை.

4. ஒப்பந்தம் போட்ட சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். அது கோவிந்தாபுரத்தில் உள்ளது. அதன் முனிசிபல் டிவிஷன் நியாபகம் இல்லை. வார்டு எண் நியாபகம் இல்லை. கதவு எண்.813/22 ஆகும். சொத்திற்கான பட்டா எண் நியாபகம் இல்லை. டிஎஸ் நெம்பர் நியாபகம் இல்லை. 40 சதுர மீட்டர் சொத்து ஆகும். வரிவிதிப்பு எண் நியாபகம் இல்லை. அந்த வீடு ஆர்சிசி வீடு ஆகும். சொத்திற்கு செக்குபந்தி விவரம் நியாபகம் இல்லை. வீட்டின் மின் இணைப்பு எண் நியாபகம் இல்லை. ஒப்பந்தத்தை தட்சணாமூர்த்தி தயாரித்தார்.
5. நானும் பிரதிவாதியும் போய் தான் பத்திர எழுத்தரை பார்த்தோம். அவர் பிரதிவாதிக்கு வேண்டியவர். பிரதிவாதி என்னிடம் கடனுக்காக தான் பணம் வாங்கினார் என்றும் அடமான கடன் பத்திரம் எனகூறி மோசடியாக நான் கிரைய ஒப்பந்தம் எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. என் மீது உள்ள நம்பிக்கையின் பேரில் பிரதிவாதி ஆவணங்களில் கையெழுத்து போட்டார் என்றால் ஆவணத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டார்.

6. சாட்சிகளை ரமேஷ் என்பவரை நானும் பிரவீன் குமார் என்பவரை பிரதிவாதி கூட்டி வந்தார். ரமேஷை விசாரணை செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. பல லட்சம் மதிப்பிலான சொத்தை நான் மதிப்பு குறைத்து ஒப்பந்தம் எழுதியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. சொத்திற்கான மூல பத்திரத்தை பார்த்தேன். அது பிரதிவாதியிடம் தான் உள்ளது. அடமான கடன் என்பதால் தான் மூல ஆவணத்தை நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 04.03.2024ல் பிரதிவாதியை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரச்சொல்லி அறிவிப்பு அனுப்பினேன். அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். அதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை.

7. சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் அந்த தேதியில் சென்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அங்கு எந்த ஆவணத்தில் கையெழுத்து செய்தேன் என்று நியாபகம் இல்லை. அந்த ஆவணம் பற்றிய விவரம் நியாபகம் இல்லை. உண்மையில் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் மோசடியாக கிரையம் ஒப்பந்தம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 24/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.24 17:03:18 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.